இரத்தத்தின் சத்தம்



TORTURED for CHRIST

Quotes Of

Richard Wurmbrand

தமிழில்

PR. ROMILTON

இரத்தத்தின் சத்தம்

Quotes Of

Richard **Wurmbrand**

தமிழில்

PR. ROMILTON

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

அடைபட்ட அக்கினி

246-B, POCKET-C, MAYUR VIHAR,
PHASE-2, DELHI-110 091.
MOB: 98106 46981 / 99901 03010

இரத்தத்தின் சத்தம்

'கிறிஸ்துவைத் தீவிரமாய்ப் பின்பற்றுகிறவர்கள் அதற்கான ஒரு விலைக்கிரயத்தை செலுத்தவே செய்கின்றனர். அவரை வெறித்தனமாய்ப் பின்பற்றுகிறவர்களோ அடிக்கடியாய் அதற்கேற்ற மிகப்பெரிய விலைக்கிரயங்களைச் செலுத்திக்கொண்டே இருக்கின்றனர்' என்றார் போதகர் ரிச்சர்ட் உம்பிராண்ட்.

தன் தேவன் மேல் தான் வைத்த அன்பினிமித்தம் அப்படிப்பட்ட மிக அதிகமான விலைக்கிரயத்தைப் பதினான்கு ஆண்டுகள் கடுங்காவல் மற்றும் கடும் சித்ரவதைகள் மூலம் செலுத்திய உம்பிராண்டின் உயிரூட்டும் எழுத்துக்கள் இவை..

பூமியிலிருந்து இன்றும் தேவனை நோக்கிக் கூப்பிடும் இந்த 'இரத்தத்தின் சத்தம்,' வரப்போகும் நாட்களின் எழுப்புதலுக்கு விலைக்கிரயம் செலுத்த, இதோ நம்மை சவாலிட்டு அழைக்கிறது!

Whoever wishes to meet Jesus, must meet Him in places where brothers and sisters of Jesus are hungry, thirsty, naked, unwanted, sick or in prison..

Whoever keeps himself distant from these places remains distant from Jesus..



இயேசுவைச் சந்திக்க விரும்பும் யாராயிருந்தாலும், அவர்கள், பசியாகவும் தாகமாகவும், வஸ்திரமில்லாதவர்களாகவும், புறக்கணிக்கப்பட்டவர்களாகவும், வியாதியஸ்தராகவும், சிறையிலடைக்கப்பட்டவர்களாகவும் இருக்கும் நிலையிலுள்ள கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளினிடத்திலே அவர்களிருக்கும் அப்படிப்பட்ட இடங்களில் போயே அவரைச் சந்திக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நிராதரவான இடங்களிலிருந்தும், சகோதர சகோதரிகளிடமிருந்தும் தங்கள் கண்களை விலக்கித் தங்களைத் தூரப்படுத்திக் கொள்ளுகிறவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள், இயேசு கிறிஸ்துவினிடமிருந்தே தங்களைத் தூரப்படுத்திக் கொள்ளுகிறார்கள்...



It was the time when the Communists took over Rumania..My wife Sabina and I were present at this Communist Christian Congress on their invitation..

My wife told me.."Richard..stand up and wash away this shame from the face of Christ! THEY ARE SPITTING ON HIS FACE..!"

I said to her.."If I do so, you will lose your husband.." She replied.."I don't wish to have a coward as my husband.."

(For this reason, Richard Wurmbrand had to spend his next fourteen years in the Communist prisons..)

ருமேனியா நாட்டை கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் பிடிக்குள் கொண்டு வந்திருந்த நாட்கள் அவை..நானும் என் மனைவி சபீனாவும் கம்யூனிஸ்ட்டுகளால் நடத்தப்பட்ட அந்த தேசியக் கிறிஸ்தவ மாநாட்டில் கலந்து கொள்ள அவர்களது அழைப்பின் பேரில் சென்றிருந்தோம்..

அந்த மீட்டிங்கில் என் மனைவி என்னைப் பார்த்து சொன்னாள்.."ரிச்சர்ட்..அவர்கள் கிறிஸ்துவின் முகத்தில் காறி உமிழ்கிறார்கள்..நீர் எழுந்து நின்று கிறிஸ்துவுக்காக வைராக்கியம் பாராட்டி அவர் மேலுள்ள அந்த வெட்கத்தைத் துடைக்க மாட்டீரோ?"

நான் சொன்னேன்.."அப்படியானால் நீ உன் கணவனை இழக்க நேரிடும்.."அவள் சொன்னாள்.."ஒரு கோழையை என் கணவனாகப் பெற்றிருப்பதை நான் விரும்பவில்லை.."

(இதைத் தொடர்ந்து..ரிச்சர்ட் உம்பிராண்ட் கர்த்தருக்காக தைரியமாய் நின்ற ஒரே காரணத்துக்காக பதினான்கு வருட சிறைவாசமும் சித்ரவதையும் அனுபவித்தார்..)

It was strictly forbidden to preach to other prisoners. It was understood that whoever was caught doing this, received a severe beating.

A number of us decided to pay the price for the privilage preaching, so we accepted their (the communists) terms.

It was a deal. We preached and they beat us. We were happy preaching and they were happy beating us. So everyone was happy...

சக கைதிகளுக்கு சுவிசேஷம் அறிவிப்பது மிகக் கடுமையாகத் தடை செய்யப்பட்டிருந்தது. யாராயிருந்தாலும், அவர்கள் சுவிசேஷம் அறிவிப்பதாய்க் காணப்பட்டால், கடுமையான கசையடிகளுக்கும் கம்படிகளுக்கும் அவர்கள் ஆளாக வேண்டியிருக்கும் என்பது அனைவரும் அறிந்திருந்ததே...

சிறையிலும் சுவிசேஷம் அறிவிப்பதை சிலாக்கியமாய் எண்ணிய எங்களில் அநேகர், அதற்கான விலைக்கிரயத்தை செலுத்தத் தீர்மானித்துவிட்டதால், ஒருவகையில் கம்யூனிஸ்ட்டுகளின் நிபந்தனையை நாங்கள் மறைமுகமாகவே ஏற்றுக்கொண்டோம்..

அது ஒரு எழுதப்படாத ஒப்பந்தம். நாங்கள் அறிவித்தோம். அவர்கள் அடித்தார்கள். அவர்கள் அடிக்க அடிக்க, நாங்கள் சந்தோஷமாய் சுவிசேஷம் அறிவித்துக்கொண்டேயிருந்தோம். நாங்கள் அறிவிக்க அறிவிக்க, அவர்களும் எங்களை சந்தோஷமாய் அடித்துக் கொண்டேயிருந்தார்கள். அடிப்பதில் அவர்களுக்கு மகிழ்ச்சி. அறிவிப்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி. ஒரு வகையில் எங்கள் எல்லோருக்குமே மட்டற்ற மகிழ்ச்சி...

"அவருடைய நாமத்துக்காக அவமானமும் அடியும் சகிப்பதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினாலே சந்தோஷமாய் அதைச் செய்தோம்.."(அப் 5 : 41)



When an engineer has built a bridge, the fact that a cat can pass over the bridge is no proof that the bridge is good..

A train must pass over it to prove its strength..



ஒரு பொறியாளர் பாலம் ஒன்றைக் கட்டும்போது, பூனை ஒன்று அதின்மேல் அடி மேல் அடிவைத்து நடந்து போய்விடுவதினாலேயே அந்தப் பாலம் உலகத்தரம் வாய்ந்த உறுதியானது என்று அறுதியிட்டுக் கூறிவிட முடியுமோ ?

ஒரு இரயில் அதின் மேல் அதிவேகமாய்க் கடந்துபோவதைக் கொண்டே அல்லவோ அது உறுதிப்படுத்தப்படுகிறது ?

(பாடுகளின் தீவிரமே உள்ளான மனிதனின் பெலத்தை வெளிப்படுத்தும் உரைகல்)

Prison is one of the places where we can look for the Lord. I remember a Good friday in a cell in the Romanian jail of Jilava.

We were all very hungry. But that day when the bowl of gruel was brought to us, we refused to eat it. We fasted..

Days of fasting, with deep repentance for our past sins and ardent prayers for the persecuted are the greatest gifts anyone can give to the members of the Underground Church and the mission that help them..

கர்த்தரைக் கண்டடையத்தக்க இடங்களிலே சிறைச்சாலையும் ஒன்று. ஜிலாவாவின் ருமேனிய ஜெயிலிலுள்ள செல் அறையின் பெரிய வெள்ளி நாளொன்றை நான் நினைவு கூருகிறேன்.

அறையில் அடைபட்டிருந்த நாங்கள் எல்லோருமே அன்று மிகவும் பசியோடிருந்தோம். ஆனால் அன்று எங்களது அன்றாட ஆகாரமான கூழ் ஊற்றப்பட்டபோது, அந்த நாளை நாங்கள் உபவாசத்திலேயே கழித்து, அதை சாப்பிடாமலே இருந்துவிட்டோம்.

நமது கடந்தகாலப் பாவங்களுக்காக ஆழமான மனஸ்தாபத்தோடு, இவ்விதமாய் நசுக்கப்படுபவர்களுக்காகப் பல நாட்கள் உபவாசத்தோடு செய்யப்படும் ஊக்கமான ஜெபங்களே, தங்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழும் இரகசிய சபை விசுவாசிகளுக்கும், அவர்களுக்கு உதவி செய்யும் ஊழிய ஸ்தாபனங்களுக்கும் நாம் தரும் மிகப்பெரிய வெகுமதி.

I had prepared myself for prison and torture as a soldier in a peace time prepares for the hardships of war..

I had studied the lives of christians who had faced similar pains and temptations to surrender and thought how I might adapt that experience..

Many who had not so prepared themselves were crushed by suffering or deluded into saying what they should not..



போர்க்காலக் கடினமான வாழ்க்கைமுறைக்கென்று, சமாதானமுள்ள காலத்திலேயே தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் போர்வீரன் ஒருவனைப்போல, சிறை அனுபவங்களுக்கும் அதின் கடுமையான சித்ரவதை முறைகளுக்கும் மனதளவில் என்னை நானே ஆயத்தப்படுத்திக்கொண்டேன்..

இதைப்போன்ற கொடுமையான சோதனைகளையும் தாங்கமுடியா வலி வாதைகளையும் சந்தித்துக் கடந்துபோன அநேகக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துப் படித்து, அப்படியொரு காலக்கட்டத்திலும் அனுபவத்திலும் நானும் கடந்துபோக நேரிடுமானால், அந்தச் சூழலுக்கு என்னை நானே எப்படி உட்படுத்தி, அதற்கு என்னை நானே எப்படி எப்படியெல்லாம் அர்ப்பணித்துக்கொள்வது என்று சிந்தித்து சிந்தித்து, எனக்குள் நானே முன்னோட்டம் செய்து பார்த்துக்கொண்டேன்..

இப்படித் தங்களைத் தாங்களே ஆயத்தப்படுத்திக்கொள்ளாதவர்கள் கடும் சித்ரவதைகளால் நசுக்கப்பட்டது மாத்திரமல்லாமல், நயவஞ்சகமாய் அவர்கள் வஞ்சிக்கப்பட்டு, வெளியே சொல்லக்கூடாத இரகசியங்களையெல்லாம் தங்கள் வாயிலிருந்தே கொட்டும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர் அவர்கள்..

Richard Wurmbrand

We must win rulers; political, economic, scientific and artistic personalities..

They are the engineers of souls. They mold the souls of men..

Winning them, you win the people they lead and influence..

Richard Wurmbrand

தேசத்தை ஆளுபவர்களை நாம் தேவனுக்காக ஆதாயம் செய்தாக வேண்டும். அரசியல்வாதிகள், பொருளாதார நிபுணர்கள், விஞ்ஞானிகள், திரைப்படக் கலைஞர்கள் ஆகியோர்..

மக்களின் மனங்களுக்குள்ளே ஊடுருவி, தாக்கத்தையும் செயல்பாடுகளையும் உண்டாக்குபவர்கள் இவர்களே! இவர்களே மக்களின் மனங்களைக் கவர்ந்து, வளைத்து வாழ்க்கைகளை வனைபவர்கள் !

இவர்களை ஆதாயப்படுத்துவதன் மூலம் இவர்கள் மேல் பெருமதிப்பு வைத்திருப்பவர்களையும், இவர்களால் வழிநடத்திச் செல்லப்படுபவர்களையும் மிக எளிதாய் நீங்கள் ஆதாயப்படுத்திக்கொள்ளலாம்..

If a Christian really believed that his neighbour will be tortured in all eternity in hell, he should try day and night to persuade him to repent and believe.

How sad that this doesn't happen!

இரட்சிக்கப்படாத தனது பக்கத்துவீட்டார் ஒருவர் முடிவில்லா நித்திய நரக அக்கினியிலே காலாகாலமாய் உபத்திரவப்படுத்தப்படுவார் என்று உண்மையிலேயே நம்பும் ஒரு விசுவாசி, அந்த அண்டைவீட்டார் மனந்திரும்பி விசுவாசிக்குமட்டும், அவரை சுவிசேஷத்துக்கு இணங்கப்பண்ண இரவும் பகலும் அவரோடு அங்கலாய்த்து அல்லாட வேண்டாமோ?

ஆனால் அப்படியெல்லாம் இங்கே நடப்பதே இல்லை என்று காணப்படுவது எத்தனை வேதனையான ஒன்று!

Jesus said, "Teach all the nations." He never said that we need governmental permission to evangelize..

Faithfulness to God and the Great Commission compels us to reach beyond borders to people in restricted nations.

"உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்றார் இயேசு. அரசாங்க அனுமதி பெற்றே அதைச் செய்யுங்கள் என்று அவர் ஒரு போதும் சொல்லவில்லை..

தடை செய்யப்பட்ட தேசங்களுக்குள் எல்லை தாண்டிச்சென்று அங்குள்ள ஜனங்களுக்கு நற்செய்தி கொண்டு சேர்ப்பதற்கு நம்மை நெருக்கி ஏவுவது, அந்தப் பிரதான மேய்ப்பரின் பிரதான கட்டளையின் தீவிரமும், அவருடைய பரிசுத்த நாமத்துக்காக நாம் காண்பிக்கும் உண்மையும் வைராக்கியமுமே அல்லாமல் வேறென்ன உண்டு?

I tremble because of the suffering of those persecuted in different lands..

I tremble thinking about the destiny of their torturers..

I tremble for the Church all around who don't help their persecuted bretheren..

வெவ்வேறு நாடுகளில் கிறிஸ்துவினிமித்தமும், தங்கள் விசுவாசத்தினிமித்தமும் உபத்திரவமும் சித்ரவதையும் அன்றாடம் அனுபவிப்பவர்களின் நிலையைக் கண்டு நான் நடுங்குகிறேன்.

அவர்களைக் கொடுமையாய்க் கொன்று, வதையாய் வதைப்பவர்களின் முடிவை நினைத்து இன்னும் நடுங்குகிறேன்.

ஆனால் இவைகளுக்கு மேலாய், நசுக்கப்படும் தங்கள் சக உதிரங்களின் நிர்ப்பாக்கிய நிலையை நினைத்துக்கூடப் பார்க்காத, அவர்களுக்கு எந்த விதத்திலும் உதவிக்கரம் நீட்டாத, ஆங்காங்கே, நிர்விசாரம் நிறைந்து கிடக்கும் சபைகளுக்கு வரப்போகும் நியாயத்தீர்ப்பின் நிலை கண்டு இன்னும் நடுநடுங்குகிறேன்...

Often, after a secret service, Christians were caught and sent to prison.

There Christians wear chains with the gladness with which a bride wears a precious jewel received from her beloved..

இரகசிய தலைமறை சபைகளில் அடிக்கடி நடக்கும் ஒரு காரியம் இது. ஒரு இரகசிய ஆராதனைக்குப் பின், அங்கே பிடிபடும் விசுவாசிகள் சிறைக்கு அனுப்பப்படும்போது, அங்கு மாட்டப்படும் விலங்குகளையும் சங்கிலிகளையும்,

தன் அன்பு மணவாளன் ஒருவனின் கைகளினால் பெற்றுக்கொள்ளும் விலையேறப்பெற்ற அணிகலனை அணிந்துகொள்ளும் ஒரு மணப்பெண்ணைப் போல, அவ்வளவு மகிழ்ச்சியோடு அள்ளி அணைத்து அணிந்துகொள்வார்கள் அவர்கள்...

From now on a fire burned within us, as it did in the disciples on the road to Emmaus..

"Snowflakes cannot fall on a hot stove.."

The coldness of this world could no longer harm us, although we had to pass through bitter times..

எம்மாவுக்குப் போகும் பாதையிலே சீஷர்களின் இருதயம் கொளுந்துவிட்டு எரிந்ததைப் போலவே, பற்றியெரியும் நெருப்புக் கனலொன்று எங்களுக்குள்ளே இடைவிடாமல் எரிந்துகொண்டேயிருந்தது..

"எரியும் அடுப்பினுள்ளே
பனிக்கட்டிகள் விழலாகுமோ?"

கசப்பான காலங்களுக்குள்ளே நாங்கள் கடந்து செல்ல நேரிட்டபோதும், இவ்வுலகத்தின் குளிர்ந்து சில்லிட்ட செத்த கரங்கள் எங்களைத் தொடவும் முடியவில்லை..எங்களுக்குள் எரிந்து கொண்டிருந்த அக்கினிப்பிழம்பை ஒருபோதும் அது அவித்துப்போடவும் முடியவில்லை..

A faith that can be destroyed by suffering is not faith...



பாடுகள்,
சோதனைகள்,
வேதனைகளினாலே
வெந்து அழிந்து
காணாமல் போகும்
விசுவாசம் ஒரு
விசுவாசமே
அல்ல...

I have seen Christians in communist prisons with fifty pounds of chains on their feet, tortured with red-hot iron pokers, in whose throats spoonfulls of salt had been forced, being kept afterward without water, starving, whipped, suffering from cold- and praying with fervor for their torturers..

This is humanly inexplicable! It's the love of Christ, which was poured out in our hearts..

தங்கள் கால்களில் 25 கிலோ எடையுள்ள இரும்புச் சங்கிலிகளைச் சுமந்தவர்களாய், பழுக்கக் காய்ச்சப்பட்ட கம்பிகளாலே குத்திக் குத்தி சித்ரவதை செய்யப்பட்டு, தொண்டையிலே உப்பை அடைத்துத் தண்ணீரும் ஆகாரமுமின்றிக் கொல்லும் பசியிலும், தாகத்திலும் குளிரிலும் துடிக்கவிடப்பட்டு, கசையால் அடிக்கப்பட்ட அந்த அகோர நிலையிலும், தங்களைச் சித்ரவதை செய்யும் கம்யூனிஸ்ட் ஜெயிலர்களுக்காக ஊக்கமாய் ஜெபித்துக் கொண்டிருக்கும் அநேக விசுவாச சகோதரர்களை நான் கம்யூனிசச் சிறைச்சாலைகளிலே பார்த்திருக்கிறேன்.

மனுஷீகத்திலே இது வார்த்தைகளால் விவரிக்கவே இயலாத ஒன்றேயானாலும், இது நமது இருதயங்களிலே ஊற்றப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் அன்பு ஒன்றே அல்லாமல், நிச்சயமாய் வேறெதுவுமே அல்ல !

Consider as sin

any minute of life

spent on something

other than saving souls

for eternity

from this world

doomed to destruction..

அழிவுக்கு நியமிக்கப்பட்டிக்கும்
இவ்வுலகத்திலிருந்து, முடிவில்லா
நித்தியத்துக்காக ஆத்துமாக்களை
மீட்பதை விட்டு விட்டு, வேறு எது
எதிலோ இங்கே வாழ்க்கையில்
கழிக்கப்படும் ஒவ்வொரு நிமிடமும்
பாவமென்றே
கணக்கில் கொள்ளப்பட்டுக்
கருதப்பட வேண்டும்..

Persecution has always produced a better Christian - a witnessing Christian, a soul-winning Christian..

Communist persecution has backfired and produced serious, dedicated Christians such as are rarely seen in the free lands..

சாட்சி பகர்ந்து, ஆத்தும ஆதாயம்
செய்துகொண்டே போகும்,
மேம்பட்டதும், தரமும் முதிர்ச்சியுமான
ஒரு விசுவாசிகளின் கூட்டத்தையே,
கிறிஸ்துவுக்காக அனுபவிக்கும் பாடுகளும்,
உபத்திரவமும், நசுக்கி ஒடுக்கப்படுதலும்
எப்போதும் உருவாக்கி வந்திருக்கின்றன..

கம்யூனிசக் கரங்கள் தன்
சித்ரவதைகளுக்கு நேர் எதிரிடையாக,
சுதந்திர நாடுகளில் கூடக்
காணக் கிடைக்காத, அபூர்வமும்
அர்ப்பணிப்பும் தியாகமும் தீவிரமுமான
விசுவாசிகளையே பிறப்பித்திருக்கிறது...

"When Christians in free countries win a soul for Christ, the new believer may become a member of a quietly living church..

But when those in captive nations win someone, we know that he may have to go to prison and that his children may become orphans..

The joy of having brought someone to Christ is always mixed with this feeling that there is a price that must be paid..

சுதந்திர நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்கள் ஒரு ஆத்துமாவைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் செய்யும்போது, அந்தப் புது விசுவாசி, எப்போதும் போல், எல்லாரையும் போல், சாதாரணமாய் செயல்படும் ஒரு சபையில் அங்கமாகி சங்கமமாகி விடுகிறார்..

ஆனால் அடைபட்ட இரும்புத்திரை நாடுகளில் ஒருவர் கிறிஸ்துவுக்குள் நடத்தப்படும்போது, இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒரே காரணத்தினாலேயே அந்த விசுவாசி சிறைக்குப் போக வேண்டியிருக்குமென்றும், அவரது பிள்ளைகள் தாய் தகப்பனற்ற அனாதைகளாக வேண்டியிருக்குமென்றும் நாங்கள் நன்றாகவே அறிந்திருந்தோம்..

கிறிஸ்துவுக்காக ஒருவரை ஆதாயப்படுத்தும்போது, அதிலே கிடைக்கும் மகிழ்ச்சியும் சந்தோஷமும், அதற்குப் பின்னால் செலுத்தப்படவேண்டிய ஒரு விலைக்கிரயத்தைக் குறித்த அச்சமும் பயமும் சேர்ந்த ஒரு விதத் திகில் கலந்த களிகூருதலாகவே எங்களுக்கு இருந்து வந்திருக்கிறது..

"Even the best of Christians are troubled by the question, "Why does an Almighty God send, or atleast allow, suffering?"

When you are nagged by thoughts like this, say to yourself, "I am still in elementary school..

When I graduate from the university of Christian life, I will understand His ways better and doubts will cease.."

"சர்வ வல்ல தேவன் பாடுகளை ஏன் அனுப்புகிறார்? அவர் அவைகளை ஏன் அனுமதிக்கிறார்?" என்ற கேள்வியினால் கிறிஸ்தவர்களில் விசேஷித்தவர்கள் கூட அலசடிப்படுகின்றனர்..

இப்படிப்பட்ட எண்ணங்கள் உங்களில் அலைமோதும்போது, "ஆவிக்குரிய வாழ்வின் ஆரம்பப்பள்ளியிலேயே தான் நான் இன்னும் இருக்கிறேன்..."

"கிறிஸ்தவ வாழ்வின் பல்கலைக்-கழகத்திலிருந்து பட்டம் பெற்று நான் வெளிவரும்போது, அவரது வழிகளை இன்னும் தெளிவாக அறிந்துகொள்வேன், அப்பொழுது என் சந்தேகமெல்லாம் தீர்ந்துவிடும்.." என்று உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்ளுங்கள்..



If the heart is cleansed by the love of Jesus Christ, and if the heart loves Him, one can resist all tortures. What would a loving bride not do for a loving bridegroom?

God will judge us not according to how much we endured, but how much we could love..

The christians who suffered for their faith in prisons could love. I am a witness that they could love God and men..



இயேசு கிறிஸ்துவின் அன்பினாலே இருதயம் ஒன்று கழுவப்பட்டிருக்குமானால், அதே இருதயம் அவரை அளவில்லாமல் நேசிக்கிற ஒன்றாகவும் இருக்குமானால், அப்படிப்பட்ட இருதயமுள்ள ஒருவரால் எப்படிப்பட்ட உபத்திரவ உபாதைகளையும் தாங்க முடியும். தான் நேசமாய் நேசிக்கும் தன் மணவாளனுக்காக ஒரு மணவாட்டி என்ன தான் செய்யமாட்டாள் ?

நாம் கர்த்தருக்காக எவ்வளவு சகித்தோம், எவ்வளவு பொறுமையுடன் தாங்கினோம் என்பதின்படி தேவன் நம்மை நியாயந்தீர்க்காமல், அவைகளுக்கும் மத்தியில் அவரை நாம் எவ்வளவாய் நேசித்தோம் என்பதைக் கொண்டே அவர் நம்மை நியாயந்தீர்ப்பார்..

தங்கள் விசுவாசத்துக்காக சிறைச்சாலைகளில் சித்ரவதைப்படுபவர்கள், அவ்வளவாய் அவரை நேசிக்கவும் செய்வார்கள். அவர்கள் தேவனை மட்டுமல்ல, மனிதரையும் எவ்வளவாய் நேசிப்பார்கள் என்பதற்கு நானே ஒரு சாட்சியாயிருக்கிறேன்..

A great part of my family was murdered.

It was in my own house, that the murderer was converted. It was also the most suitable place.

So in communist prisons, the idea of a Christian mission to the Communists was born..



என் குடும்ப அங்கத்தினர் அநேகரில் பெரும்பாலானோர் இரத்தசாட்சிகளாய்க் கொல்லப்பட்டனர்.

அவர்களைக் கொன்றவன் என் வீட்டிலேயே இரட்சிக்கப்பட்டான். அதைத் தவிர அவன் மனந்திரும்ப மிகச்சிறந்த இடம் வேறென்ன இருக்க முடியும்?

ஆகவே அவர்களது கம்யூனிஸச் சிறைக்கூடங்களிலேயே, கம்யூனிஸ்ட்டுகளாகிய அவர்களை இரட்சிப்பின் சுவிசேஷத்தினால் சந்தித்துவிடுவது என்ற ஒரு ஊழியத்தைக் குறித்த யோசனை பிறந்து செயல்வடிவமானது..



I don't know what this so-called "pure" gospel is. Was the preaching of John the Baptist pure? He did not say only "Repent, for the Kingdom of heaven is at hand..!" (Mt 3:2), He also "rebuked [Herod] ... for all the evils which Herod had done (Luke 3:19). He was beheaded because he didn't confine himself to abstract teaching..

Jesus did not preach only the "pure" Sermon on the Mount, but also what some actual church leaders would have called a negative Sermon: "Woe to you,scribes and pharisees, hypocrites! Serpents, brood of vipers!" (Mt 23:27,33).

It is for such "impure" preaching that He was crucified. The pharisees would not have bothered about the Sermon on the Mount..

"சுத்த சுவிசேஷம்" என்று இவர்கள் எதைச் சொல்லுகிறார்கள் என்பதே எனக்குப் புரியவில்லை. யோவான் ஸ்நானகனின் பிரசங்கம் "சுத்தமாய்" இருந்ததோ? " மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது.. (மத் 3:2), என்று மட்டுமே அவன் பிரசங்கிக்கவில்லை, ஆனால் "ஏரோது செய்த எல்லாப் பொல்லாங்குகளினிமித்தமும்" ஏரோதைக் கடிந்து, கண்டித்துக் கண்டனமே செய்தான் அவன் (லூக் 3:19). பொத்தாம் பொதுவாகவோ, சுருக்கமாய் மேலோட்டமாகவோ அவன் பிரசங்கித்ததற்காக அல்ல, இருதயத்தைக் குத்திப் பிளந்து பிரசங்கித்ததற்காகவே அவனது தலை துண்டாடப்பட்டது..

மலைப்பிரசங்கம் என்ற "சுத்தமான " பிரசங்கத்தை மட்டுமே இயேசு பிரசங்கிக்கவில்லை, ஆனால் இன்றைய சபைத் தலைவர்கள் சிலர் "எதிர்மறைப் பிரசங்கம்" என்று சொல்லும், "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே உங்களுக்கு ஐயோ! சர்ப்பங்களே! விரியன் பாம்புக்குட்டிகளே!" என்றுமல்லவோ அவர் பிரசங்கித்தார்? "சுத்த சுவிசேஷம்" என்று அல்லாத இப்படிப்பட்ட "சுத்தமில்லா சுவிசேஷத்துக்காகவே அல்லவோ அவர் சிலுவையில் அறையப்பட்டார்?

மலைப்பிரங்கத்தைப் பற்றியெல்லாம் பரிசேயர் கவலைப்படவில்லை - அவர்களை இடித்ததே இயேசுவின் இப்படிப்பட்ட முகத்திலறைந்து முகத்திரை கிழிக்கும் பிரசங்கமே!

Past sins, if you repent of them, whiten you..

They made a great psalmist out of David, a faithful believer out of the prostitute Rahab, a zealous apostle out of the persecutor Saul..

I have been a loved preacher and a writer with a particular vocation. My sermons and books would not have had the same quality without my past of anarchy, vice and violent atheism..

உங்கள் பழைய பாவங்களுக்காக நீங்கள் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினால், அந்த அனுபவம் உங்களை உறைபனியிலும் வெண்மையாக்கும்..

அவைகளே, விழுந்து போன தாவீதிலிருந்து ஒரு மிகப்பெரிய சங்கீதக்காரனையும், ராகாப் என்னும் வேசியிலிருந்து ஒரு உண்மையும் உத்தமமுமான விசுவாசியையும், சவுல் என்னும் சர்வநாசக்காரன் ஒருவனிலிருந்து வைராக்கியமுள்ள ஒரு அப்போஸ்தலனையும் உடைத்து உருவாக்கிற்று..

எல்லோராலும் நேசிக்கப்பட்ட ஒரு பிரசங்கியாகவும் எழுத்தாளனாகவும் குறிப்பிட்ட பணிகளைத் திறம்படச் செய்துகொண்டிருந்த ஒரு ஊழியன் நான். ஆனால் நான் சந்தித்த அராஜகங்களையும், சூழ்ச்சிகளையும், தேவனற்ற கொடுங்கோலர்களையும், வன்முறைகளையும் நேரில் கண்டிராது, அந்தப் பாதைகளினூடே நானும் கடந்து சென்றிராதிருந்திருப்பேனேயானால், என்னுடைய பிரசங்கங்களும், எழுத்துக்களும் இப்போது கொண்டிருக்கும் தரத்தையும் தாக்கத்தையும் ஒரு போதும் அடைந்திருந்திருக்க முடியாது!

[உங்கள் கடந்த காலப் பாதைகளையும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டே, தேவன் உங்கள் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் சீராக்கிக் கூராக்குவார் !]



The first step in preparing for persecution is identifying the things we will do at any cost..

We will read God's Word, pray, worship, gather with other believers and witness for Christ, and nothing will stop us from doing these things with willing and glad hearts..



என்ன விலைக்கிரயமானாலும் இன்னின்ன காரியங்களைச் செய்தே தீருவோம் என்று அவைகளை அடையாளம் காண்பதே, கிறிஸ்துவுக்காக அனுபவிக்கும் உபத்திரவங்களுக்கு நம்மை உட்படுத்த ஆயத்தமாகிக் கொள்வதின் முதல்படி..

முழுமனதோடும், மகிழ்ச்சியான உள்ளத்தோடும் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதும், உள்ளத்தை ஊற்றி ஜெபிப்பதும், ஆவியில் ஆராதிப்பதும், மற்ற விசுவாசிகளுடன் அன்பின் ஐக்கியம் கொள்வதும், கிறிஸ்துக்காகப் பாரத்தோடு சாட்சி பகர்வதுமான இவைகளை சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் செய்தே தீருவோம், இவைகளைச் செய்வதிலிருந்து எதுவொன்றும் எங்களைத் தடுக்க முடியாது என்ற தீர்க்கமான முடிவே உபத்திரவத்துக்கு ஆயத்தமாகுதலின் அடிப்படை நியமமாகும்...

Sending away the Beloved, the bride says to the Bridegroom, "Until the day breaks and the shadows flee away, turn, my beloved, and be like a gazelle or a young stag upon the mountains of Bether" (2:17).

I know of a Christian who was in solitary confinement for years and experienced much hunger and pain.

Sometimes he was aware of Jesus asking him: "Is it too difficult for you? Shall I ease your lot?" Again and again he replied: "Please, Jesus, see to others. I can bear it. I'm all right." This is the bride's mentality.

She tells Jesus to follow His calling as a king. She can carry the cross allotted to her in the hope that, when the evening comes, He will return to her. She is reluctant to make continual demands upon Him.

தன்னைச் சந்திக்க வரும் தன் நேசரை அன்பாய்த் திருப்பி அனுப்பும் மணவாளி, தன் மணவாளனிடம் சொல்கிறாள், "என் நேசரே! பகல் குளிர்ச்சியாகி, நிழல் சாய்ந்துபோகும் வரைக்கும், நீர் திரும்பி.....கலைமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும் (உன் 2:17).

தனிமைச் சிறையிலும் கொட்டடியிலும் பசியையும் வலியையும் மிகவும் அதிகமாய்ப் பல வருடங்கள் அனுபவித்த ஒரு கிறிஸ்தவரை நான் அறிவேன்..

"மகனே, இது உனக்கு மிகவும் கடினமாயிருக்கிறதா? உன் பாடுகளை நான் சற்று இலகுவாக்கித் தரட்டுமா?" என்று இயேசுவே வந்து தன்னிடம் கேட்பது போல அவர் உணரும்போதெல்லாம், "வேண்டாம் அப்பா, என்னை விட இன்னும் முடியாத நிலைல இருக்கிற வேற யாருக்காவது நீங்க அதைச் செய்ங்க.. நான் தாங்கிக் கொள்வேன்" என்று திரும்பத் திரும்பச் சொல்வாராம். இது தான் தன் நேசரை நேசமாய் நேசிக்கும் ஒரு நேச மணவாளியின் மனோபாவம்.

"இயேசுவே, ராஜாவான நீர் உமது ராஜ்யத்தின் காரியங்களைக் கவனிப்பீராக! நீர் தரும் பெலத்தில் எனக்கு அளிக்கப்பட்ட சிலுவையை நான் சுமந்து வருவேன்.. ஒரு நாள் நீர் என்னை சந்திக்க வருவீர், அது வரை நான் எனது காரியங்களாலும் கஷ்டங்களாலும் உம்மை அலட்டித் தொந்தரவு செய்வதில்லை.." என்றே அவள் அவரிடம் சொல்லுவாள்.

Many persecuted believers have thrived in the desert of prison..

Perpetua, a third-century Christian who was imprisoned and martyred for her faith, said of her prison cell: "The dungeon became to me as it were a palace, so that I preferred being there to being elsewhere."

Do not be fearful of dry times in your spiritual life. Tap into the Bridegroom, seeking only His living water and you will thrive.

உபத்திரவமும் உபாதையும் வதையுமாய் வதைபட்ட அநேக விசுவாசிகள், தங்கள் பாலைவனச் சிறைகளையே சோலைவனமாக்கிக் கொண்டனர்.

தன் விசுவாசத்துக்காகச் சிறைப்பட்டு இரத்தசாட்சியான மூன்றாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவ விசுவாசப் பெண் பெர்ப்பெச்சுவா தன் சிறை அனுபவத்தைச் சொல்கிறாள் : "இருள்மண்டிக் கிடக்கும் பாதாளக் கொட்டடியான இந்தச் சிறை அறை எனக்கு வசந்த மாளிகையாகவே இருக்கிறது. வேறு எங்கும் இருப்பதை விட இங்கு இருப்பதையே மனதார விரும்புகிறேன்.."

உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் நீங்கள் கடந்து செல்லும் வறண்ட வனவாச நாட்களைக் கண்டு கலங்காதிருங்கள். அவரது ஜீவ தண்ணீரைத் தாகமாய்த் தேடி மணவாளனின் மறைவிடத்துக்குள் உட்பிரவேசியுங்கள். உங்கள் வறண்ட நிலம் நீரூற்றாகும் !

Doing the work
of God
is dangerous!

Not doing it,
is
more dangerous!

தேவனுடைய வேலையை
உண்மையாய்ச் செய்வது
ஒரு வகையில் ஆபத்து!

ஆனால் அதைச்
செய்யாமலிருப்பது
(நியாயத்தீர்ப்பின்படி)
அதை விட ஆபத்து!

God gave the best
He had..

Jesus died for
our sins..

Death could not hold
Him.. It could not
contain the best..

Let us too give our
best to Him..

தேவன் தம்மிடமிருந்த தமது ஒரே பேறான குமாரனையே நமக்காகக் கொடுத்துவிட்டார்..

இயேசுவோ நமது பாவங்களுக்காக மரித்து (விலையேறப்பெற்ற) தம்மையே நமக்காகத் தந்துவிட்டார்..

தன் பிடியில் அவரை வைத்திருக்க இயலாத மரணமும் தன்னிடமிருந்த மிகச் சிறந்ததான அவரை உயிர்த்தெழும்படி கொடுத்துவிட்டது..

நாமும் நம்மிடமுள்ள உச்சிதமானதை அவருக்கென்று மனதாரக் கொடுத்துவிடுவோம்..

Love, like light, must always be travelling..
Man must spend it, give it away..

When light does not travel at maximum speed, it is not light. Christianity that does not do its utmost to win souls for Christ is not christianity..

What is the worth of a selfish faith which assures my going to heaven but does not stimulate me to seek the salvation of others?

ஒளியைப் போலவே, அன்பு என்ற பண்பும் நேர்கோட்டில் பயணித்துக்கொண்டே இருக்க வேண்டும். மனிதன் அன்பை செலவழிப்பது மட்டுமல்லாமல், அதைக் கொடுத்துக் கொண்டேயும் இருக்க வேண்டும்..

ஒளியானது தன் அதிவேகத்தில் பயணிக்காவிட்டால், அது ஒளியே அல்ல..அதைப் போலவே கிறிஸ்துவுக்காகத் தன்னாலியன்ற அதிகபட்ச ஆத்தும ஆதாயம் செய்யாத ஒரு கிறிஸ்தவம் கிறிஸ்தவமே அல்ல !

மற்றவர்கள் எப்படியாவது இரட்சிப்படைய வேண்டுமென்ற பாரமும், கவலையும், உந்தி எழுப்பும் உத்வேகமும் இல்லாமல், நான் மட்டும் பரலோகம் போய்ச் சேர்ந்தால் போதும் என்கிற சுயநல விசுவாசத்தினால் லாபம் என்ன ?

The underground church is a poor and suffering church.

But it has very few lukewarm members...

மறைமுக, தலைமறை,
இரகசிய சபை தரித்திரமும்,
ஏழ்மையும்,பாடுகளும், வேதனையும்,
உபத்திரவத்தின் மேல் உபத்திரவமும்
அனுபவிக்கும் சபை தான்..

ஆனால் அதிலே, குளிருமின்றி
அனலுமின்றி அலைந்து திரியும்
வெதுவெதுப்பான வெறும்
மேலோட்டமான விசுவாசிகளே
இல்லையெனும் அளவு மிகமிகக்
குறைவே!

February 29, 1948...

On that beautiful Sunday, on my way to church, a van of secret police stopped in front of me, two men jumped out and pushed me into the vehicle and I was kidnapped from the street by the secret police..

Two days earlier, while I was reading the book of Joshua, I noticed an endless repetition of the word "FEAR NOT." Out of curiosity, I started to count them, and discovered that it occurs 366 times in the whole Bible.

When the car was on the move, a man inside aimed a pistol at me and the other one chained my foot to my wrist..

In all these, I went on similing.."Why are you smiling?" One asked. "Because it is written 366 times.." I said. "What is written 366 times?" "Just what I need.."

Although they could not understand, I thanked God that, that day was 29th February and God had already given the word "DO NOT FEAR " even for the additional day of the leap year! It was my rhema on that day that I should not fear for the rigourous imprisonment and persecution which awaited me for the next in 14 years!

பெப்ரவரி 29, 1948...

அது ஒரு அழகான ஞாயிறு காலை..சபை ஆராதனை நடத்த ஆலயத்துக்கு நான் நடந்து சென்று கொண்டிருந்த போது, எனக்கு முன்னே வேகமாய்க் கிறீச்சிட்டு நின்ற போலீஸ் வேனிலிருந்து குதித்த இரகசிய போலீஸார் குண்டுக்கட்டாக என்னைக் கடத்திச் சென்றனர்.

அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தான் யோசுவாவின் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த நான், அதிலே "பயப்படாதே" என்ற வார்த்தை திரும்பத்திரும்ப வரக்கண்டு, ஆச்சரியத்தினால் அந்த வார்த்தையை எண்ண ஆரம்பித்த போது, முழு வேதபுத்தகத்திலும் 366 தடவை இந்த வார்த்தை வருவதைக் கண்டு, லீப் வருடமான வருடத்துக்கும் சேர்த்தே 366 தடவை "பயப்படாதே" என்று தேவன் எழுதி வைத்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

இப்பொழுதோ நான் இரகசியப் போலீஸின் பிடியில்..வண்டி வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும்போதே ஒருவன் என்னை நோக்கித் துப்பாக்கியை நீட்டியிருக்க, இன்னொருவன் என் கையையும் காலையும் சேர்த்து விலங்கு மாட்டினான்..

எனக்கோ சிரிப்பு வந்தது.. "ஏன் சிரிக்கிற?" என்று ஒருவன் கேட்க, "366 தடவை எழுதியிருக்கிறது" என்று பதில் சொன்னேன். "என்னது 366 தடவை?" "எனக்கு இப்போது என்ன வேண்டுமோ அது எழுதியிருக்குது.."

நான் சொன்னது அவனுக்குப் புரியாவிட்டாலும், நான் கைதான அந்த நாளான பெப்ரவரி 29 அன்று, அடுத்து எனக்கு வரப்போகும் பதினான்கு வருட கடுங்காவலுக்கும் சித்ரவதைகளுக்கும் என்னைத் திடப்படுத்தும்படியாகவே "பயப்படாதே" என்ற வார்த்தை லீப் வருடமான அந்த பெப்ரவரி 29 க்கும் சேர்த்தே எனக்கு ரேமாவாக அருளப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து தேவனைத் துதித்தேன்...



Deny yourself for a period the food, you love most, or some luxury, in clothing, and think of those who eat unbearable food and are in rags..

Interrupt your sleep for prayer, on behalf of those interrogated during the night..

Give up some item of cosmetics, for those who cannot even wash..

Renounce an hour of television, for those who for years have been in solitary confinement in underground cells and see nothing..Try to be silent for a day, in order to empathize with the solitary, who cannot speak to anyone for years..

Sacrifice your complaining and grumbling for one day. Take time from other pre-occupations to pray for the persecuted..



கிறிஸ்துவுக்காகச் சிறைச்சாலைகளிலே கிடந்து, நாம் முகர்ந்து பார்க்கக்கூட அருவருக்கும் உணவுகளை உண்பவர்களை நினைவுகூர்ந்து, நீங்கள் அதிகமாய் விரும்பி உண்ணும் உணவு வகைகளைக் குறிப்பிட்ட சில நாட்களுக்குத் தியாகமாய் ஒதுக்கிவைத்து, அங்கே கடுங்குளிரில் கந்தைத் துணிகளோடு நாட்களைக் கழிப்பவர்களை நினைத்து, உங்கள் சுகமான வசதி வாழ்க்கையிலும், சுற்றுலாக்களிலும் சிலவற்றை சில காலம் அவர்களுக்காகத் தியாகம் செய்வீர்களோ?

அங்கே சிறையிலே நள்ளிரவு நேரங்களில் விசாரணை என்ற பெயரில் தலைகீழாய்த் தொங்கவிடப்பட்டு அடித்து நொறுக்கப்படும் விசுவாச சக உதிரங்களை நினைத்து, உங்கள் இரவு நேரத் தூக்கத்தில் சில மணி நேரங்களை தியாகம் செய்து அப்படிப்பட்டவர்களுக்காக ஜெபிப்பீர்களோ ?

பல நாட்களாக, மாதங்களாகக் குளித்தே அறிந்திராத அவர்களை எண்ணிப் பார்த்து, அழகு சாதனங்களுக்கும், பியூட்டி பார்லர்களுக்கும் நீங்கள் செய்யும் செலவுகளைக் குறைத்துக்கொள்வீர்களோ ?

வெளியுலக மனிதர்களைப் பார்க்கவோ பேசவோ வாய்ப்பே இல்லாமல் வருடக்கணக்காய் பூமிக்கடியிலுள்ள இருண்ட பாதாள டஞ்சன் சதுப்பு அறைகளில் அடைந்து கிடக்கும் சகோதர சகோதரிகளுக்காய், நீங்கள் உங்கள் டிவியிலும் இன்ட்டர்நெட்டிலும் பொழுதுபோக்கிற்காய் செலவழிக்கும் நேரத்தில் ஒரே ஒரு மணி நேரத்தைவிட்டுக் கொடுத்து, அவர்களது நிலைமையை நீங்களும் கொஞ்சமாவது புரிந்துகொள்ள முயற்சிக்கும்படி, உங்கள் நாட்களில் ஏதாவது ஒரு நாள் முழுவதும் மௌன விரதம் காத்துத் தியாகம்செய்ய முன்வருவீர்களோ?

ஒரே ஒரு நாள், சிற்சில அற்பசொற்ப காரியங்களுக்காய் சலிக்காமலும் சிடுசிடுக்காமலும், முறுமுறுக்காமலும் இருந்து பார்ப்பீர்களோ? உங்கள் அதிகப்படியான வேலைகளுக்கு மத்தியிலும் கிறிஸ்துவுக்காக ஒடுக்கப்பட்டு நசுக்கப்படுபவர்களுக்காக ஜெபிக்க சற்று நேரம் ஒதுக்குவீர்களோ ?

RICHARD WURMBRAND

SERVE GOD

AS IF

HE HAD

ONLY

YOU...

தேவனது மனபாரத்தைச் சுமந்து,

அவரைப் போன்ற மனதுடையவர்களாய்,

அவருக்குத் தோள் கொடுத்து,

அவருக்கு ஊழியம் செய்ய,

உங்களைத் தவிர

அவரிடம் வேறு ஒருவருமில்லை

என்ற பாரத்தோடு

அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள்...

Richard Wurmbrand

In 1938, in a remote Romanian village, an old German carpenter named Christian Wolfkes lay sick. The only person by his side giving aid and comfort was a Jewish follower of Christ.

When Wolfkes recovered, he was so grateful to God that he prayed earnestly for the opportunity to share the gospel with a Jewish person. Although none lived in his village, still he prayed.

One day myself and Sabina as a newly married Jewish couple arrived the village on vacation. The carpenter enthusiastically gave me a Bible. I had read the Scriptures once but had gotten nothing from them. However, this time, my heart was stirred. I didn't know why, until I learned the secret.

The carpenter and his wife had spent many long hours every day praying for my salvation. The Bible he gave me was written not so much in words, but in flames of love fired by his prayers..

The Spirit of God freed my heart, and I believed. Sabina also came to faith and was so deeply changed, she soon brought others to the Messiah..

Richard Wurmbrand

1938 ம் வருடம்..

ருமேனியாவின் குக்கிராமம் ஒன்றிலே கிறிஸ்டியன் வோக்ஸ் என்ற வயதான தச்சன் ஒருவர் சுகவீனமானார். அவரருகில் அவருக்கு ஆதரவாகவும் ஆறுதலாகவும் இருந்து அவரைக் கவனித்துக் கொண்ட ஒரே ஒரு நபர், யூதக் கிறிஸ்தவ விசுவாசி ஒருவர்.

தேவ கிருபையால் சுகமாகி எழுந்த, தேவனுக்கு நன்றியுணர்வு நிறைந்த வோக்ஸ், எப்படியாவது யூதர் ஒருவருக்கு சுவிசேஷத்தைச் சொல்லிவிடும் வாய்ப்பு ஒன்றைத் தேவன் தனக்குத் தந்துவிடும்படியாய் ஊக்கமும் விடாப்பிடியுமாய் ஜெபித்து வந்தார். அவரது அந்த ஜனசஞ்சாரமற்ற கிராமத்தில் யூதர் ஒருவர் கூட இல்லாதிருந்தும் தன் ஜெபத்தை மட்டும் அவர் விடவே இல்லை.

அந்த நாட்களிலே புதிதாய்த் திருமணமாகியிருந்த யூதத் தம்பதிகளாகிய நானும் என் மனைவி சபீனாவும் அந்தக் கிராமத்துக்கு எங்கள் விடுமுறையைக் கழிக்கச் சென்றிருந்தோம். அப்பொழுது எங்களைச் சந்தித்த அந்தத் தச்சுவேலை செய்பவர், மிகுந்த ஆர்வத்தோடு வேதபுத்தகம் ஒன்றை எனக்குக் கொடுத்தார்.

அதற்கு முன்பே நான் பைபிளைப் படித்திருந்தாலும், அப்போதெல்லாம் எந்தவித மாற்றத்தையும் எனக்குள்ளே கண்டிராத நான், இப்பொழுது ஏதோ ஒரு வித்தியாசத்தையும் அசைவையும் எனக்குள்ளே அது செய்ய ஆரம்பித்ததை உணர்ந்தேன். ஆனால் அந்த இரகசியத்தை மட்டும் என்னால் அறியமுடியவில்லை. அந்தத் தச்சரும் அவரது மனைவியும் ஒரே ஒரு யூதனை இரட்சிப்பினால் சந்திக்கும் தங்கள் பாரத்தை என்னில் நிறைவேறக்கண்டு, எனக்காக எத்தனை நீண்ட மணி நேரங்கள் தினந்தோறும் தேவ சமூகத்தில் மன்றாடியிருந்தனர் என்ற அந்த இரகசியத்தை பிறகு தான் நான் அறிந்துகொண்டேன்.

அவர் எனக்குத்தந்த அந்த வேதாகமம், வெறும் வார்த்தைகளால் மட்டுமே எழுதப்பட்டிருந்த ஒன்று அல்ல, அவ்வளவும் அவரது ஜெபத்தினால் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த அன்பின் அக்கினியினால் அனலூட்டப்பட்ட வார்த்தைகளால் நிறைந்த ஒன்றாகவே இருந்தது.

அதைப் படிக்கப் படிக்க தேவ ஆவியானவர் என்னை விடுதலை செய்தார். என்னைத் தொடர்ந்து, தன்னில் ஆழமான மாற்றத்தை இரட்சிப்பில் கண்டடைந்த சபீனா, மிகச் சீக்கிரமே மற்றவர்களையும் மேசியாவிடம் கொண்டு வர ஆரம்பித்தாள்..

As for us, our hearts go out to the martyrs. Not that we pity them..

Their chains are of pure gold. Their cross is perfumed. All those whose senses are alive know it..

To Christian, prison has always been a delectable orchard where the sweetest nectar flows..

Neither do we give to the sufferings of the martyrs, an honour, due only to the cross of Christ..



கிறிஸ்துவுக்காகத் தங்களையே பானபலியாய்,
தானபலியாய் வார்க்கப்பட ஒப்புக்கொடுத்த
இரத்தசாட்சிகளுக்காய் எங்கள் இருதயம் ஏங்குகிறது.
அவர்களுக்காகப் பரிதாபப்படுவதினால் அல்ல..

அவர்களைக் கட்டி வைத்திருக்கும் சங்கிலிகள் சுத்தப்
பசும்பொன்னல்லவோ? அவர்கள் சுமக்கும் சிலுவை
சுகந்த வாசனை நிறைந்ததல்லவோ? தங்களில்
உணர்வுள்ள யாவரும் அதை அறிவார்களே !

அப்படிப்பட்ட விசுவாசிகளுக்கு சிறைச்சாலை
என்பது நறுமணம் வீசும் பூஞ்சோலையும்
மாஞ்சோலையுமாகவே இருந்து வந்திருக்கிறது..

ஆனாலும் கிறிஸ்துவின் சிலுவைக்குத் தரும்
கனத்தையும் மகிமையையும் நாம் ஒருபோதும்
இந்த இரத்தசாட்சிகளின் பாடுகளுக்குக் கொடுத்து
அவைகளை மிகைப்படுத்துவதில்லை...

In my ministry to the free world about the underground churches, I have met some sceptics..They should read a letter which I received by hidden channels from an officer of the Russian Secret police..

It goes like this..."I read all your books and am happy that these things were told..I know that some doubt your assertion. I would recommend to these people to come and sit in a Soviet prison ten years under my command. Then they would know the truth.."

"The only thing in your book wherewith I do not agree is that you are so mild. I, in your place would have thundered !"

இரகசிய மறைமுக சபைகளைக் குறித்து சுதந்திர நாடுகளிலே நான் பேசியும் எழுதியும் வருவதைக் குறித்து சந்தேகித்து விமரிசிக்கும் சிலரை நான் சந்தித்திருக்கிறேன். ரஷ்ய உளவுத்துறையின் அதிகாரி ஒருவரால் எனக்கு எழுதப்பட்டு, இரகசியமாய்க் கடத்தப்பட்டு என் கைக்கு வந்து சேர்ந்த கடிதம் ஒன்றை இப்படிப்பட்ட எனது விமர்சகர்கள் படிக்க வேண்டும்.

அவர் எழுதுகிறார்..."உங்கள் புத்தகங்கள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் படித்தேன், கிறிஸ்தவர்களுக்குக் கம்யூனிஸச் சிறைகளில் நடக்கும் கொடுமைகளை நீங்கள் வெளியுலகுக்குத் தெரியப்படுத்துவதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன்..

ஆனால் நீங்கள் உறுதிப்படுத்தி வலியுறுத்தும் காரியங்களை நம்பாமல் சந்தேகப்படுகிறவர்களும் உண்டு என்பதையும் நான் அறிவேன். அப்படிப்பட்டவர்களுக்கு நான் சொல்வேன்...அவர்கள் என் கையின் கீழ், ஒரு பத்து வருஷம் சோவியத் ரஷ்ய ஜெயில்களிலே வந்து அடைபட்டுக் கிடக்கட்டும்..அப்பொழுது அறிவார்கள் உண்மையை..."

"ஆனால் சிறைச்சாலைகளின் அத்தனை பயங்கர கொடூரங்களையும் கொடுமைகளையும் இத்தனை மென்மையாய் நீங்கள் எழுதுவதைத்தான் என்னால் ஜீரணிக்க முடியவில்லை. உங்கள் இடத்திலிருந்து, நான் எழுதும் எழுத்துக்களாய் இருந்தால் அவைகள் இடியாய் இறங்கியிருக்கும் !..."


In Russia
there are
Christians
who wear iron chains
under their shirts,
day and night,
so as never to
forget their bretheren
who are in bonds...

கட்டப்பட்டிருக்கும்
தங்கள் சக உதிரங்களின்
வதையையும் வாதையையும்
தாங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது
என்று, தங்களுக்குத் தாங்களே
ஞாபகமூட்டிக் கொள்ளும்படியாகவே,
வெளியே தெரியாதவாறு தங்கள்
சட்டைகளுக்குள் இரும்புச் சங்கிலிகளை
இரவும் பகலும் அணிந்து சுமந்து திரியும்

கிறிஸ்தவர்கள்

இன்றும் ரஷ்யாவிலே உண்டு..



In our ministry to the persecuted, we often receive letters from people from various backgrounds. One of those came from Sikkim, in India which encouraged us.

The content was this...

"Warmed through your most timely message; I cannot help shedding tears for all you, dears..

I hope that the message of the Underground Church will prepare God's children of the free world also to face such hardships in the coming days.."



கிறிஸ்துவினிமித்தம் நசுக்கப்பட்டு ஒடுக்கப்படுகிறவர்கள் மத்தியில் நாங்கள் செய்யும் ஊழியங்களிலே வெவ்வேறு விதமான பின்னணியிலுள்ளவர்களிடமிருந்து எங்களுக்குக் கடிதங்கள் வருவதுண்டு.

அவைகளில், இந்தியாவிலுள்ள சிக்கிமிலிருந்து வந்த கடிதமொன்று எங்களை வெகுவாக உற்சாகப்படுத்தியது.

அதிலே காணப்பட்டது இது தான்...

"மிகச்சரியான நேரத்தில் வந்த உங்கள் செய்தி என்னை அனல் மூட்டியபோது, உங்களைப் போன்றவர்கள் படும் சொல்ல முடியாத பாடுகளை அறிந்து என் அழுகையை என்னால் அடக்க முடியவில்லை.."

"மறைமுக இரகசிய சபைகளின் இந்தச் செய்திகள், சுதந்திர நாடுகளிலுள்ள தேவ பிள்ளைகளையும், வரப்போகும் நாட்களில் அவர்கள் சந்திக்கப்போகும் இப்படிப்பட்ட உபத்திரவங்களுக்கு ஆயத்தப்படுத்தும் என்று நான் நம்புகிறேன்..."

The Psalmist loved the house of God. So does every Christian..

Next Sunday when you sit comfortably in your pew, remember Communist China's and Russia's Churches,

changed into warehouses, museums, factories and dancing clubs (even temples and mosques..).

தேவனுடைய வீடு சங்கீதக்காரனுக்கு இன்பமாயிருந்தது. அதைப் போலவே ஒவ்வொரு விசுவாசிக்கும் தனது சபையையும் ஆலயமும் இன்பமாகவே இருக்கிறது.

அடுத்த ஞாயிறு உங்கள் ஆலய இருக்கைகளில் நீங்கள் வசதியாய் வந்து அமரும்போது, கம்யூனிச இரும்புத்திரை, மூங்கில்திரை நாடுகளான சோவியத் ரஷ்யாவிலும், செஞ்சீனாவிலும்,

குடோன்களாகவும், தொழிற்சாலைகளாகவும், மால்களாகவும், சினிமா தியேட்டர்களாகவும், மியூஸியம்களாகவும், ஏன், வேறு சில நாடுகளில் இந்துக் கோயில்களாகவும், மசூதிகளாகவுமே மாற்றப்பட்டுக் கிடக்கும் எண்ணிறந்த ஆலயங்களை ஒருமுறை நினைத்துப் பார்த்துக்கொள்ளுங்கள்...



Is it not happening here in Romania as it happened in Russia? Lenin strongly defended the persecuted sects, until he came to power.

Then tens of thousands of them died in concentration camps..

First the church lulled into acceptance. Then fell the blow for the next fifty years...

[History is once again going to repeat here !!]



ரஷ்யாவில் நடந்ததே இங்கே ருமேனியாவிலும் நடக்கவில்லையோ? தான், அதிகாரத்துக்கு வந்து, பதவியில் அமரும் வரை, ஒடுக்கப்பட்ட வர்க்கத்துக்குத், தானே தானைத்தலைவன் என்றும், பாதுகாவலனென்றும் ஓங்கிக் குரல் கொடுத்துக்கொண்டிருந்தான் லெனின்..

ஆனால் ஆட்சி கைக்கு வந்ததும் அவனால் வதை முகாம்களில் கொல்லப்பட்டவர்கள் தான் எத்தனை எத்தனை ஆயிரங்கள் !

"இவரே எங்கள் அறங்காவலர்" என்று தாலாட்டுப்பாடி முதலில் திருச்சபையைத் தன்னை ஆரத்தழுவ வைத்தான் அவன். அதைத் தொடர்ந்து விழுந்த அடியில் அடுத்த ஐம்பது ஆண்டுகள் திருச்சபை எழுந்திருக்க மாட்டாமலே போனது !

[வரலாறு மீண்டும் ஒரு முறை இங்கே அரங்கேறக் காத்திருக்கிறதோ?]

RICHARD WURMBRAND

In any case, the Chinese Christians were unprepared for the onslaught.

When the Communists took over China, Communism had ruled Russia already thirty years..

Nothing was taught in the Chinese Churches and Seminaries about the experiences and methods of work of the Underground Church. The examples of the Russian martyrs were not known..



தாங்கள் எதிர்கொள்ளப்போகும் உபத்திரவக் காலக்கட்டத்துக்கு சீனக் கிறிஸ்தவர்கள், எந்த வகையிலும் ஆயத்தமில்லாதவர்களாகவே இருந்தனர். கம்யூனிஸம், சீனாவைத் தன் பிடிக்குள் கொண்டுவந்திருந்தபோது, ரஷ்யா, ஏற்கனவே அதின் இரும்புப்பிடியில் முப்பது வருடம் சிக்கிச் சீரழிந்திருந்தது.

ரஷ்ய இரகசிய சபைகள் அனுபவித்த கடும் சித்ரவதைகளோ அல்லது அவைகளுக்கு மத்தியிலும் அந்த மறைமுக சபைகள் அங்கே செயல்பட்டு வந்த விதங்களோ, இவைகளில் எந்த அனுபவமும் குறித்த எந்த அறிவும் சீன சபைகளுக்கோ ஊழியர்களுக்கோ இருந்ததுமில்லை, அவைகள் சபைகளிலோ, செமினரிகளிலோ, பைபிள் காலேஜ்களிலோ கற்றுத்தரப்படவுமில்லை.

தானும் அதே பாதையில் கடந்துபோகப்போவதை சற்றும் அறியாத, ஆயத்தப்பட்டிராத சீன சபைகளுக்கு ரஷ்ய இரத்தசாட்சிகளின் முன்னோடி வரலாறுகள் அறியப்படாதவைகளாகவே இருந்தன.



"If we cut out their tongues and forbid the Christian speech, these Christians love with their hands, with their feet and with their eyes.

They love always and everywhere until their last respiration.

Does anybody know how to take out the power of love from these stupid Christians? Does anyone know a way to put hands on their Christ?

- Red Guards



"கிறிஸ்துவைப் பற்றிப் பேசாதே" என்று நாம் இந்தக் கிறிஸ்தவர்களின் நாவை அறுத்துப் போட்டால், இவர்களோ தங்கள் கைகளாலும், பாதங்களாலும், கண்களாலும் அல்லவோ நம்மை நேசிக்கிறார்கள் ?

தங்கள் கடைசி உயிர்மூச்சு நிற்கும்வரை எப்பொழுதும் எங்கேயும் அன்பு ஒன்றையே அல்லவோ இவர்கள் அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

இந்தக் கிறிஸ்தவ மடையர்களுக்குள்ளிருந்து இவர்களது அன்பின் வலிமையைப் பிடுங்கியெறிந்து போடுவது எப்படியென்று யாராவது அறிவீர்களோ ? தாங்கள் நேசமாய் நேசிக்கும் இவர்களது கிறிஸ்துவின் மேலேயே நாம் கைபோடுவது எப்படியென்று யாராவது சொல்லமாட்டீர்களோ ?

Richard Wurmbrand

Two Christians trembled from cold in a cell. Each had a thin blanket.

One of the Christians noticed how the other trembled, and the thought shot into his mind, "If that were Christ, would you give him your blanket?" Of course he would. He immediately spread the blanket over his brother..

Next day they were given more blankets.

+++++++++

Richard Wurmbrand

சிறை அறை ஒன்றுக்குள் விசுவாச சகோதரர்கள் இருவர் கடுங்குளிரில் நடுங்கிக்கொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்ததோ மிக மெல்லிதான ஒரே ஒரு கம்பளி மட்டுமே..

அவர்களில் ஒருவர், அந்தக் கொல்லும் குளிரில் செத்துக்கொண்டிருந்த மற்றவரைப் பார்த்தபோது, "இவரது இடத்தில், கிறிஸ்து இப்படி நடுங்கிக்கொண்டிருப்பாரானால் நீ உன் கம்பளியை அவருக்குத் தரமாட்டாயோ?" என்ற எண்ணமொன்று அவருக்குள் மின்னிப் பளிச்சிட, உடனடியாய்த் தன் கம்பளியினால் அந்த சகோதரனை மூடினார் அவர்..

அடுத்த நாளே அவர்கள் இருவருக்கும் கூடுதலான கம்பளிகள் கொடுக்கப்பட்டன..

+++++++++

I was told that a Western or a free world publisher would never publish such gruesome things I write about the Underground Church that the people would not read it.

Well, if so, we will have to circulate this information in handwriting, as the Bible circulates in handwriting in Russia.

But the Christians elsewhere must know all these things, and in detail, because it might be their future fate..

I will not tailor what I have to say,
I will not trim my thought in order to ensure it will be published..

கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் இழைக்கப்படும், நினைத்துக்கூடப் பார்க்க முடியாத கொடுமைகளைப் பற்றி நான் எழுதுபவைகளை மக்கள் படிக்கவே மாட்டார்கள் என்பதால், அவைகளை ஒரு மேலை நாட்டுப் பதிப்பாளரோ, சுதந்திர நாடுகளில் உள்ளவர்களோ ஒரு போதும் அச்சிட்டுப் பதிப்பிட மாட்டார்கள் என்று பலர் என்னிடம் சொல்வதுண்டு.

நல்லது. அப்படியானால், ரஷ்யாவில் விசுவாசிகளுக்குள் பகிர்ந்து படிக்கப்படும் கையால் எழுதப்பட்ட வேதாகமப் பிரதிகளைப் போலவே, இப்படிப்பட்ட தகவல்களையும் நாங்கள் கையால் எழுதியே கிறிஸ்தவர்களுக்குள் விநியோகித்துத் தெரியப்படுத்துவோம்.

கம்யூனிஸ நாடுகளில் கிறிஸ்தவர்களுக்கு இன்று நடப்பவை எல்லாமே எதிர்காலத்தில் மற்றவர்களுக்கும் நடக்க எல்லா வாய்ப்புகளும் தாராளமாய் இருக்கிறபடியால், வெளியுலகக் கிறிஸ்தவர்களும் இப்படிப்பட்டவைகளை நுணுக்கமாய் அறிந்திருக்கவேண்டியது அவசியத்திலும் அவசியம்.

நான் எழுதுபவைகளெல்லாம் அச்சாகிப் பதிப்பாக வேண்டுமே என்பதற்காகவோ, அல்லது மக்கள் விரும்புவதில்லை என்பதற்காகவோ, என் எண்ணங்களையும், இரும்புத்திரைக்கும் மூங்கில் திரைக்கும் பின்னே நடக்கும் அக்கிரமங்களையும், எழுதவேண்டிய பிரகாரம் நான் எழுதாமல், என் எழுத்துக்களைச் சுருக்கிக்கொண்டு, இவைகளில் எதுவொன்றிலும் நான் சமரசம் செய்துகொள்ளப்போவதே இல்லை ...

RICHARD WURMBRAND

In the chinese town of Chungking, Bibles, hymnals and prayer books were burned publicly, the Christians being compelled to attend..

One of them profited from the momentary inattention of Red Guards to snatch just one page which had not been consumed by fire. He had to act quickly and could not get more than one page. For years, the Underground Church of this town had fed upon this single page of Scripture..

I wondered which page it was. It could have been a page from Genesis or Nehemiah or full of Geneologies which they would not have understood. After two years of striving, I have succeeded in getting the information as to which page they have..

Every Sunday they read, "On this rock will I build My Church; and neither Mao Tse Tung, nor the burying alive of Christians, nor the gouging out of eyes, nor the cutting of tongues, nor the desecretion of Church buildings, nor the gates of hell shall prevail against it.. (Matthew 16:18)."

They have the page with this text. Really something to live on..

RICHARD WURMBRAND

சீன நகரமான சுங்க்கிங்கிலே அந்தக் காட்சியைக் கட்டாயமாய்ப் பார்க்கும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்ட விசுவாசிகளின் கண்களுக்கு முன்பாக வேதாகமங்களும், பாடல் புத்தகங்களும், ஜெபப்புத்தகங்களும் பொது வெளியிலே தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

அந்தச் செம்படை வீரர்களின் கண்களுக்குத் தப்பி, எரிந்து கொண்டிருந்தவற்றில் நெருப்புப்படாத ஒரே ஒரு வேதாகமப் பக்கத்தை மட்டும் விசுவாசி ஒருவர் கண்ணிமைக்கும் நேரத்தில் பறித்து எடுத்துக் கொண்டார். அந்த ஒரு விநாடியில் அவரால் அந்த ஒரே ஒரு பக்கத்தை மட்டுமே ஒளித்து வைத்துக்கொள்ள முடிந்தது. அடுத்து வந்த பல வருடங்கள் அந்த ஊரின் இரகசிய சபை, வேதத்தின் அந்த ஒரே ஒரு பக்கத்தின் வார்த்தைகளை உண்டே உயிர் வாழ்ந்தது.

அது வேதத்தின் எந்த ஒரு பகுதியாக இருந்திருக்கும், ஒரு வேளை அது ஆதியாகமத்தின் ஒரு பக்கமாக இருந்திருக்குமோ, அல்லது நெகேமியா புத்தகத்தின் ஒரு பக்கமோ, அல்லது அவரால் புரிந்து கொள்ள இயலாத வம்சாவளிப் பட்டியலாக இருக்குமோ என்று வெகு நாட்களாக எனக்குள்ளே நான் வியந்து போராடிக்கொண்டிருந்தேன். கடைசியாக, இரண்டு வருடத் தீவிர முயற்சிக்குப் பின், அது எந்தப் பகுதி என்ற தகவல் எனக்குக் கிடைத்தது.

அந்த ஒரே ஒரு பக்கத்தை வைத்து ஒவ்வொரு ஞாயிறும் அவர்கள், " இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; மா சே துங்கோ, விசுவாசிகளாகிய எங்களை உயிரோடு குழி தோண்டிப் புதைப்பதோ, எங்கள் கண்களைப் பிடுங்கி எடுப்பதோ, எங்கள் நாவுகளை அறுத்துப்போடுவதோ, எங்கள் சபைக் கட்டிடங்களை இடித்துத் தரைமட்டமாக்குவதோ அல்லது வேறு எந்தவிதப் பாதாளத்தின் வாசல்களோ சபையை மேற்கொள்வதில்லை.." என்று அந்தப் பக்கத்திலுள்ள மத்தேயு 16:18 ன் வசனத்தையே பல வருடங்களாகத் திரும்பத் திரும்பப் படித்துக்கொண்டிருந்தனர் அவர்கள்.

உண்மையிலே உயிரோடு வைத்திருக்கப் போதுமான ஒரு வசனம் தான் அது !



I have been asked again and again "What can we do to help our suffering bretheren ?." Before answering the question "What can we do?" I would say first, what we should not do..

Don't remain asleep. The Ukranian writer Shevchenko wrote, "It's terrible to fall in prison and chains, but it is much worse to sleep in liberty.."

Your country and your church is also a target for world- communism (Here - Hindu Rashtra ???) and they wish to destroy your church..



"ஒடுக்கப்படும் சபைகளுக்கும் சகோதரருக்கும் உதவி செய்ய நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வி என்னிடம் திரும்பத் திரும்பக் கேட்கப்படுகிறது. "என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் சொல்லுமுன், "சபை என்னவெல்லாம் செய்யக்கூடாது" என்பதை முதலில் சொல்லிவிடுகிறேன்..

நிலைமையின் தீவிரத்தைக் கொஞ்சங்கூட உணராமல் நிர்விசாரமாய் நாட்களைத் தூங்கிக் கழிக்காதேயுங்கள்.. "சிறையிலும் கட்டுகளிலும் விழுந்து சாவது பயங்கரம்..ஆனால் அதை விட பயங்கரம், உங்களுக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரத்தைத், தூக்கத்திலும், பெருந்திண்டியிலும், சோம்பலிலும், கவலையீனத்திலும் நிர்விசாரமாய்க் கழிப்பது" என்றார் ஷெர்கெனேவ் என்ற உக்ரேனிய எழுத்தாளர்..

இப்பொழுது உங்கள் தேசமும் சபையும் உலகமயமாக்கப்படும் கம்யூனிசத் தீவிரவாதத்துக்கு (இங்கே - இந்து ராஷ்ட்ரமாக்கும் இந்துத்துவாவுக்கு???) இலக்காகிப் போனதை அறிவீர்களோ? உங்கள் சபைகளை அழித்து நிர்மூலமாக்குவதே அவர்களது இலக்கும் இலட்சியமும் தலையான குறிக்கோளுமாயிருக்கிறது என்பதையும் அறிவீர்களோ ?

Richard Wurmbrand

Free yourselves from illusions. Don't believe such general sentences as "Right triumphs in the end." The end might be after centuries. Mohammedanism triumphed over Christianity in North Africa a thousand years ago, and the situation has not been reversed until now.

When Jesus promised that the gates of hell will not prevail against His Church, He relied on the fact that His disciples would not sleep, expecting victories to fall from heaven..

Leave the beautiful looking sentence "God will save us." He will never make spiritual sleep and apathy give, as a result, Christian triumph..

If we go on as until now, persecution of Christians will become worse. The world in which we live is harsh and unromantic. Nice, hope-inspiring slogans do not prove true..

Richard Wurmbrand

மாயையான நம்பிக்கைகள் மற்றும் உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்ளும் பொய்யான கற்பனைக் கனவுகளிலிருந்து வெளியே வாருங்கள். "முடிவில் வாய்மையே வெல்லும்" போன்ற மேற்போக்கான முழக்கங்களை நம்பிக்கொண்டிருக்காதீர்கள். எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பிறகே முடிவு வருமானால் என்ன செய்வீர்கள்? வட ஆப்பிரிக்காவிலே கிறிஸ்தவத்தை இஸ்லாம் விழுங்கி ஏப்பம் விட்டு ஆயிரம் வருடங்கள் உருண்டோடிவிட்டது. இன்னும் அங்கே நிலைமை மாறியதாகக் காணோம்.

"பாதாளத்தின் வாசல்கள் தமது சபையை மேற்கொள்வதில்லை" என்று இயேசு வாக்குத்தத்தம் செய்தபோது, வெற்றியும் ஜெயமும், ஏதோ வானத்திலிருந்து மடியில் வந்து விழும் என்ற மாய நம்பிக்கையில் தமது சீஷர்கள் தூங்கிவிடக்கூடாது என்ற உண்மையையும் சேர்த்து உரக்கவே சொன்னார் அவர்.

"சமாதானம் சமாதானம்" என்று மேற்பூச்சாய்ப் பூசி, "கர்த்தர் நம்மைக் காப்பார்" என்பது போன்ற அழகு ததும்பும் சொல்லோவிய சொற்றொடர்களையெல்லாம் மறந்துவிடுங்கள்! ஆவிக்குரிய கனநித்திரையையும் கவலையீனத்தையும் கண்டும் காணாமல் பொறுத்துக்கொண்டு, ஒரு விசுவாசிக்கு வெற்றி மேல் வெற்றியையெல்லாம் அள்ளித் தந்துகொண்டேயிருப்பவர் அல்ல கர்த்தர்!

இப்போதிருக்கும் இந்த நிலையிலேயே நாம் இன்னும் தொடருவோமானால், உபத்திரவத்தின் மேல் உபத்திரவமும், வதையின் மேல் வாதையும் வந்து நம்மை மூடும்! நாம் வாழும் உலகம் ஒன்றும் நம்மேல் அத்தனை சுலபமாய்க் கருணையும் காதலும் காட்டிவிடும் ஒரு உலகமுமல்ல.. இது போன்ற கூச்சல் எல்லாம் இங்கே காரியத்துக்கு உதவப்போவதுமல்ல..

Richard Wurmbrand

A Church without missionary work is no church. The persecuted Church under the Roman emperors sent missionaries to countries far away.

But what about our churches? Christian missions are on the decrease. There are fewer protestant missionaries than ten years ago!

The population of the world grows by sixty three million a year. Only two millions will have a chance of hearing the gospel..



மிஷினரி அருட்பணி இல்லாத சபை ஒரு சபையே அல்ல.. ரோமச் சக்கரவர்த்திகளின் அராஜக ஆளுகையின் கீழ் நசுக்கப்பட்ட ஆதிசபை, தான் ஒடுக்கப்பட்ட நிலையிலும், பூமியின் கடையாந்திரங்கள் வரைக்கும் மிஷினரி அருட்பணியாளர்களை அனுப்பிக்கொண்டேயிருந்தது.

ஆனால் நமது சபைகளின் நிலை என்ன? அருட்பணி ஊழியங்களும் இயக்கங்களும் தேய்ந்து காய்ந்து காணாமல் போகும் நிலை! பத்து வருடங்களுக்கு முன்னால் இருந்ததைவிட இப்போது பணிக்களங்களிலுள்ள மிஷினரிகளின் எண்ணிக்கை மிகக்குறைவு.

உலக ஜனத்தொகை வருடத்துக்கு அறுபத்துமூன்று மில்லியன் பெருகிக்கொண்டே போகும் நிலையில், சுவிசேஷம் அறிவிக்கப்படுவதோ அவர்களில் இரண்டு மில்லியன்களுக்கே!



Remember those who are in prison, as if you were together with them in prison... (Heb 13:3)

At this moment you have brothers and sisters kept in chains tied behind their backs, sometime for weeks, having to lap their food like dogs. You have brethren and sisters in s trait-jackets and gagged.

At this moment, Mrs. Malozemlova weeps in her home. Her seven children have been taken away from her, because she had taught them about God. And her children and the children of the family of Sloboda and thousands of others weep, crying desparately, "Mummy, Mummy..." They will not see their mothers again.

At this moment in Red China, Christians have their eyes gouged out, their tongues cut off. "Die to yourself and live their life !!"

கட்டப்பட்டவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள் போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள். (எபி 13:3)

நீங்கள் இதைப் படித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே, அங்கே இரும்புத்திரை, மூங்கில்திரை நாடுகளிலே, வாரக்கணக்காகத் தங்கள் புறங்கைகள் சங்கிலியால் கட்டப்பட்டவர்களாக, நாய்களைப் போலத் தங்கள் உணவைத் தரையிலே நக்கித் தின்னும் அகோர நிலையிலுள்ள அநேக விசுவாச சகோதர சகோதரிகள் சிறையிலே இன்றும் உண்டு என்பதை அறிவீர்களோ ? கையை உடலோடு இறுகக் கட்டிவைத்திருக்கும், தலை முதல் கால் வரையிலான உலோக உடையில், வாய்க்கும் பூட்டுப்போடப்பட்ட பரிதாப நிலையிலுள்ள சகோதர சகோதரிகளும் அங்கே உண்டு என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

தன் குழந்தைகளுக்குக் கர்த்தரைப்பற்றிச் சொல்லிக்கொடுத்தாள் என்பதற்காக அவளது ஏழு பிள்ளைகளையும் அவளிடமிருந்து நிரந்தரமாக அரசாங்கம் பறித்துக்கொண்டுபோக, தன் வீட்டில் அங்கே ஆறுதலின்றிக் கதறிக் கொண்டிருக்கிறாள் மலோசெம்லோவா. அவளது ஏழு பிள்ளைகளோடு, ஸ்லோபோடாவின் பிள்ளைகளையும், அவர்களைப் போன்ற ஆயிரக்கணக்கான பிள்ளைகளையும் கதறக்கதற அவர்கள் தாய் மடியிலிருந்து வலுக்கட்டாயமாய்ப் பிடுங்கிச் செல்கின்றது செம்படை. இனி அந்தக் குழந்தைகள் ஒரு போதும் தங்கள் தாய்களின் முகத்தைப் பார்க்கப்போவதேயில்லை..

நீங்கள் இதைப் படித்துக்கொண்டிருக்கும் இதே வேளையில் அங்கே செஞ்சீனாவிலே தங்கள் கண்கள் பிடுங்கப்பட்டு, நாவு அறுக்கப்பட்டு, ஜெயிலிலே கண்ணீரில் புரளும் அநேக விசுவாசக் கிறிஸ்தவர்கள் இப்பொழுதும் உண்டு. அவர்களை நினைத்து, உங்கள் சுயத்துக்குச் செத்து, அவர்கள் வாழ்க்கையை கொஞ்சம் வாழ்ந்து பாருங்களேன் !!



Your riches, even if they were relative, will be a terrible burden to you at the last judgement. So will be, even more than your riches, your comfort, your easy-going, pleasure- loving ways..

Unburden yourselves, prepare yourselves for meeting Jesus, who will tell you, "I was in jail". You seek His fellowship. Identify yourself with Him and with those in prisons..

He has never said that
He will be in cathedrals..



உங்கள் செல்வமும் பொக்கிஷங்களும், அவை உங்கள் மனதுக்கு எவ்வளவு தான் நெருக்கமான உறவைப் போலப் பிரியமாயிருந்தாலும், கடைசி நியாயத்தீர்ப்பிலே அவைகளே உங்களது பயங்கரமான பாரமாய் மாறிப்போகும் என்பதை மறந்து போகாதீர்கள்! இந்தச் செல்வச்செழிப்புகள் மட்டுமல்ல, உங்கள் வசதிகள், சொகுசு வாழ்க்கைகள், உல்லாசம், ஊர்சுற்றல், களியாட்டங்கள், மனம் போன வாழ்க்கை - இவை யாவுமே உங்கள் தலைமேல் பாராங்கல்லாய் உட்கார்ந்து உங்களை அமுக்கிப் போடும்!

ஆகவே இப்படிப்பட்ட பாரமான யாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு, "நான் காவலிலிருந்தேன்.." என்று சொன்ன இயேசுவை அவரது காவலிலேயே சந்திக்க ஆயத்தமாகிக் கொள்ளுங்கள். அவரது ஐக்கியத்தையே நீங்கள் வாஞ்சிப்பீர்களேயானால், காவலில் இருப்பவரான அவரோடும், அவருக்காகக் கட்டுண்டவர்களாய் இருப்பவர்களோடும், உங்களையும் காவலில் இருப்பவர்களாய் அடையாளப்படுத்திக்கொண்டு, அவரோடு அவராய் அந்தக் கட்டுகளில் நீங்களும் ஒன்றித்துவிடுங்கள்.

"நான் காவலில் இருந்தேன்" என்று தான் அவர் சொன்னாரே தவிர, "கதீட்ரலில் இருந்தேன்" என்று ஒருபோதும் அவர் சொல்லவே இல்லை..

மொழிபெயர்ப்புகள்:

ஒரு கைதியின் டைரி
[ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith]

கேட்டகோம்ஸ்
இரத்தசாட்சிகள்
[Martyrs of Catacombs]

நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[Thou art My battle Axe -
Dr. Paul Enenche]

கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown]

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

மொழிபெயர்ப்புகள்:

ரேவன்ஹில்
பேஜஸ்

என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்?
[Rev. லியோனார்ட் ரேவன்ஹில்]

உடைத்தெறி
[Breakthrough -
Rudy Lack]

எழுப்புதல்
எழுத்துக்கள்
[Assorted Revival Notes]

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

என் தகப்பனே என் தகப்பனே !
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே !

என் மகனாகிய
அப்சலோமே !
என் மகனே ! என் மகனே !

விக்கினத்தின்
மேல் விக்கினம்

சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...

நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக !

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

எழுப்புதல் ஏவுகணைகள்

எழுப்புதல் வீரர்களின் என்றும் அழியா எழுத்துக்கள்...

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

இனிமேல்
சம்பவிக்கப்போகிறது
என்ன ?

இந்து தேசம்
முதல்
இந்துத்துவா வரை...

மீண்டும்
ஒரு
மிஸா ?

மிஷன் 2024

குருதிப் பிரளயம்

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

இதோ நாட்கள்
வருகிறது !

நாட்கள்
எண்ணப்படுகிறது

ரிவைவா
ஒரு எழுப்புதல் பயிற்சிப் பாசறை

வெளியீடுகள்

எழுப்புதலின் அடிப்படைகள்,
ஆரம்பப் பாடங்கள்,
ஆணி வேர்கள்.

ரிவைவல் 66
வேத புத்தகத்தின்
66 எழுப்புதல்கள்

ரிவைவல் 66 (பகுதி 2)
வேத புத்தகத்தின்
66 எழுப்புதல்கள்

எழுப்புதல் 300
சபை சரித்திரம் கண்ட
300 எழுப்புதல்கள்

எழுப்புதலும்
மிஷனரி வரலாறும்

எழுப்புதலும் (பகுதி 2)
சுருக்கமான சபை சரித்திரமும்

எழுப்புதலும் வரப்போகும்
நாட்களும் (பகுதி 1)

எழுப்புதலும் இன்றைய
நாட்களும் (பகுதி 2)

புத்தகங்கள் கிடைக்குமிடம்

அடைபட்ட அக்கினி

246-B, Pocket-C, Mayur Vihar, Phase-2, Delhi-110091
Cell: 98106 46981 / 99901 03010

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

- வருகைக்கு முன்னான வசந்தம்
- யோவேல் மறவேல்!
- ஹிட் லைக் ஹிட்லர்
- இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது !
- நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக !
- ஆத்துமப்பிணைப்பு (Soul Tie)
- விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்
- கறுப்பு பெந்தெகோஸ்தே
- ஆரம்பகால இரத்தசாட்சிகள்
- அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..
- எழுதிவைத்தான் எசேக்கியா!
- எனக்கு உண்டானவைகளில் நான் பெற்றுக்கொள்ளாதது யாது?
- தேவனின் அசையாச் சொத்து
- திரை உலகே ! கலை உலகே !

அடைபட்ட
அக்கினி

246-B, Pocket - C, Mayur Vihar,
Phase-2, Delhi - 110091
Mob : 9810646981
email: hiddenfireromilton@gmail.com

இரத்தத்தின் சத்தம்

‘கிறிஸ்துவைத் தீவிரமாய்ப் பின்பற்றுகிறவர்கள் அதற்கான ஒரு விலைக்கிரயத்தை செலுத்தவே செய்கின்றனர். அவரை வெறித்தனமாய்ப் பின்பற்றுகிறவர்களோ அடிக்கடியாய் அதற்கேற்ற மிகப்பெரிய விலைக்கிரயங்களைச் செலுத்திக்கொண்டே இருக்கின்றனர்’ என்றார் போதகர் ரிச்சர்ட் உம்பிராண்ட்.

தன் தேவன் மேல் தான் வைத்த அன்பினிமித்தம் அப்படிப்பட்ட மிக அதிகமான விலைக்கிரயத்தைப் பதினான்கு ஆண்டுகள் கடுங்காவல் மற்றும் கடும் சித்ரவதைகள் மூலம் செலுத்திய உம்பிராண்டின் உயிரூட்டும் எழுத்துக்கள் இவை..

பூமியிலிருந்து இன்றும் தேவனை நோக்கிக் கூப்பிடும் இந்த ’இரத்தத்தின் சத்தம்,’ வரப்போகும் நாட்களின் எழுப்புதலுக்கு விலைக்கிரயம் செலுத்த, இதோ நம்மை சவாலிட்டு அழைக்கிறது !

அடைபட்ட அக்கினி
246-B, POCKET-C, MAYUR VIHAR,
PHASE-2, DELHI-110 091.
MOB: 98106 46981 / 99901 03010

PASTOR. ROMILTON